# நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் யாரேனும் ஒருவர் பாலியல் பலாத்காரம் அல்லது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளீர்களா/ஆளாகியுள்ளார்களா?

## The Ferns உள்ள பணியாளர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

The Ferns  ஒரு பாலியல் வன்கொடுமைக்கானப் பரிந்துரை மையமாகும், இது பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் உணர்வுரீதியான ஆதரவை வழங்குகிறது.

பாலியல் வன்கொடுமை யாருக்கு வேண்டுமானாலும் நேரலாம்;  பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்களுக்கும். The Ferns இல் நாங்கள் உங்களுக்கு உதவிக்கான ஓர் இடத்தையும் நீங்கள் மீண்டு வருவதற்கு நடைமுறைசார் மற்றும் உணர்வுசார் ஆதரவையும் வழங்குவோம்.

### இது உங்கள் விருப்பம்

The Ferns இல் காவல்துறையினரைத் தொடர்பு கொள்ள நீங்கள் கட்டாயப்படுத்தப்பட மாட்டீர்கள். உங்களுக்குத் தேவையான உதவியை வழங்க நாங்கள் இருக்கின்றோம், நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் அனைத்தையும் நாங்கள் மதிப்போம்.

காவல் துறையினரை நீங்கள் இதில் ஈடுபடுத்த விரும்பினால், இதை எவ்வாறு செய்வது என்பது குறித்து நாங்கள் உங்கள் விளக்குவோம், மேலும் இச்செயல்முறை முழுவதிலும் நாங்கள் உங்களுக்கு உதவியாக இருப்போம்.

உங்களுக்கு வழக்கு மற்றும் நீங்கள் தரும் தகவல்கள் அனைத்தும் நிச்சயம் இரகசியமாகக் கையாளப்படும், மேலும் குழந்தைகள் அல்லது தாக்குதலுக்குள்ளான வயதுவந்தவர்களை உள்ளடக்கும் வழக்குகள் மட்டும் எமது கடமையின் ஓர் அங்கமாக சம்பந்தப்பட்டச் சேவைகளுக்கு தானாக தெரிவிக்கப்படும்.

### யோசிப்பதற்கான தருணமிது

உங்கள் பரிசோதனையில் இருந்து சேகரிக்கப்படும் சான்றுகளைப் எங்களால் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் மற்றும் வருங்காலத்தில் நீங்கள் புகாரளிக்கத் தீர்மானித்தால் இச்செயல்முறையில் நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்.

### பாதுகாப்பு

உங்கள் பாதுகாப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானது, மேலும் பாலியல் வன்கொடுமைக்குப் பிறகு உங்களுக்கு ஏதேனும் பாதுகாப்புப் பிரச்சனைகள் இருந்தால், நாங்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்குவோம். உங்கள் பாதுகாப்பு குறித்து நீங்கள் கவலையுற்றால், எந்த நேரம் வேண்டுமானாலும் நீங்கள் காவல்துறையினரை 101 இல் தொடர்பு கொள்ளலாம்.

**ஓர் அவசரகால நிலையின் போது 999 ஐ தொடர்பு கொள்க.**

**பாலியல் வன்கொடுமை அல்லது பாலியல் பலாத்காரத்திற்கு நீங்கள் ஆளானால், என்ன செய்வது:**

1. காவல்துறையினரை ஈடுபடுத்த வேண்டாம் என்று நீங்கள் கருதினால் மற்றும் நீங்கள் எந்தவொரு ஆபத்திலும் இல்லாவிடில், பின்வரும் விவரங்களில் நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்:

   The Ferns – **0300 123 5058** (9 – 5)

   மின்னஞ்சல்: **contact@theferns-suffolk.org.uk**

2. வன்கொடுமையின் போது நீங்கள் அணிந்திருக்கும் ஆடைகள் அனைத்தையும் துவைக்காமல், முடிந்தால் காகிதப்பையில் போட்டு பாதுகாப்பாக வைத்திருக்கவும்.

3. **பின்வருவனவற்றைச் செய்யக்கூடாது:**

- குளித்தல் அல்லது கழுவுதல்
- பற்களைத் துலக்குதல் கூடாது
- வன்கொடுமை நடந்த இடத்தில் எதையும் கலைக்கக் கூடாது

4. பாலியல் பலாத்காரம் அல்லது பாலியல் வன்கொடுமைக்கு நீங்கள் ஆளாகி இருந்து, உங்களுக்கு அவசரமாகக் காவல்துறையினரின் உதவி தேவைப்பட்டால், 999 ஐ அழைத்துவிட்டு ஓர் பாதுகாப்பான இடத்தில் இருக்கவும். எங்களுடன் பேச ஓர் மருத்துவர் அல்லது வேறு ஏதேனும் தொழில்நெறிஞரை அணுகத் தேவையில்லை, எங்களை நேரடியாகவே தொடர்பு கொள்ளலாம்.

The Ferns

## மேலும் விபரங்களுக்கு இணையதளத்தை வலம்வருக

## www.theferns-suffolk.org.uk